DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.286/2023 | Deposition of Witness for : PW6 |
| Name : திரு.சண்முகராஜ் | Father/Husband Name : |
| Age : | Village : |
| Taluk : | Calling : உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30 April 2026.
A1 to A3 absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது குரும்பூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் மெஞ்ஞானபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்தபோது 29.05.2023 ஆம் தேதி 19.00 மணிக்கு மெஞ்ஞானபுரம் காவல்நிலைய தலைமைக்காவலர் HC 1649 திரு.மணிக்குமார் என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்தபோது முதலூர் கிராமம், கடாட்சபுரம் முத்துகிருஷ்ணாபுரம் துரைசிங் என்பவர் மனைவி வாடாபூ என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று CSR No.271/2023 ஆக பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்ததை நான் எடுத்து மனுவை பரிசீலனை செய்து அதன் தன்மைக்கேற்ற குற்ற எண்.37/23 U/s.294(b), 506(1) IPC மற்றும் 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவுடன் இணைத்து கனம் சாத்தான்குளம் நீதிமன்றத்திற்கு அனுப்பி மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை நான் எடுத்துக்கொண்டு 30.05.2023 ஆம் தேதி 16.30 மணிக்கு சாட்சிகள் பெர்லின், ஜெகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. சாட்சிகள் வாடாபூ, துரைசிங், சாமுவேல் ராஜ் என்ற அமுல், பார்வை மகசர் சாட்சிகள் பெர்லின், ஜெகன், தலைமைக்காவலர் மணிக்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் 30.05.2023 ஆம் தேதி 18.45 மணிக்கு முத்துகிருஷ்ணாபுரம் பஸ் ஸ்டாப்பில் வைத்து வழக்கின் 3 எதிரிகளையும் கைது செய்தும் நிலைய பிணையில் விடுவித்தேன். புகார் மனுவின் அடிப்படையிலும், புலன் விசாரணையிலும் எதிரிகள் அ.சா.1 ஐ கெட்ட வார்த்தை பேசி, கொலை மிரட்டல் விடுத்து பொது இடத்தில் வைத்து பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியது உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது U/s.294(b), 506(1) IPC மற்றும் 4 of TNPHW Act பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.30 17:55:45 +0530

**<u>1,2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

3. புகார் கொடுத்து எத்தனை மணி நேரம் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 29.05.2023 அன்று புகார் அளிக்கப்பட்டது, 30.05.2023 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. கடாட்சபுரம் ஊரில் தேர்தல் சம்பந்தமாக அடிக்கடி சண்டை போட்டு வழக்கு பதியப்படும் என்றால் நான் அங்கு பணி செய்தபோது அவ்வாறு வழக்குகள் பதிவு செய்யப்படவில்லை. வழக்கு சம்பந்தம் நடந்த வாரத்தில் தான் டயோசிஸ் தேர்தல் நடைபெற்று பிரச்சனை ஏற்பட்டது, பின்பு அந்த பிரச்சனையானது காவல்நிலையத்தில் சமாதானமாக பேசி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல, அந்த பிரச்சனையானது 2022 ஆம் வருடம் நடைபெற்றது. இந்த வழக்கில் சாட்சியாக காட்டப்பட்டிருக்கும் சாமுவேல், பெர்லின் ஆகியோர் நண்பர்கள் என்றால் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள், நண்பர்களாக இருக்கலாம். எதிரிகள் 1,2,3 ஆகியோர்கள் நண்பர்கள் என்றால் சரிதான். சாமுவேல், பெர்லின் வகையறாக்களும் 1,2,3 எதிரிகளும் தேர்தலில் எதிர் எதிர் அணிகளாக போட்டியிட்டு அவர்களுக்குள் பகை இருந்தது என்றால் இல்லை.

4. புகார் மனுவில் சம்பவம் நடந்த தேதி எப்போது என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் 27.05.2023 ஆகும். அ.சா.ஆ.1 புகார் மனுவில் அ.சா.1 சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் இல்லை என்றும் அவர்கள் ஆட்டோவில் வந்தார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1ன் கணவரும் எதிரிகளும் நண்பர்கள் என்றால் சரிதான். அ.சா.3 நண்பர் என்ற முறையில் அ.சா.1க்கு அடிக்கடி உதவி செய்வார் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அ.சா.1 ஊருக்கு செல்லும்போது அ.சா.3 வைத்திருக்கும் ஆட்டோவில் அவர் சென்று வருவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.3 ஆட்டோ, வேன், டிரக்கர் போன்ற வாகனங்களை வைத்து வாகனங்களின் உரிமையாளராக இருந்து வருகிறார் என்றால் தெரியாது.

5. அ.சா.1 க்கும் அ.சா.3க்கும் இடையில் தவறான உறவு இருப்பதாக அ.சா.2 தனது நண்பர்களான எதிரிகளிடம் கூறியுள்ளார் என்றால் தெரியாது. இதுசம்பந்தமாக அ.சா.1க்கும் அவரது கணவருக்கும்இடையே பிரச்சனை ஏற்பட்டு அ.சா.1 அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் தெரியாது. அ.சா.3 டயோசிஸ் தேர்தல் சம்பந்தமாக எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக அ.சா.1 வைத்து ஒரு பொய்யான புகாரை கொடுத்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 ஐ எதிரிகள் அ.சா.3 யிடம் பழக கூடாது என்று தடுத்ததால் அ.சா.1 ஐ வைத்து அ.சா.3 எதிரிகள் மீது ஒரு பொய்யான புகாரை அளித்துள்ளார் என்றால் சரியல்ல. எந்த சம்பவமும் நடைபெறவில்லை, பொய்யான புகாரின் அடிப்படையில் இந்த வழக்கை நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக தடயங்கள், ஆதாரங்கள் போன்றவற்றை நான் சேகரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவமே நடக்காமல் டயோசிஸ் தேர்தல் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் கொடுக்கப்பட்ட நேரத்தில் சரியான நேரத்தில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.30 17:55:52 +0530

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.30 17:55:58 +0530

Judicial Magistrate, Sathankulam.